**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 157** **நாள்: 12.10.2018**

**சென்னை சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ், தியாகராய நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகத்தின் செயலர் திரு. துர்கா சங்கர் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு பணிகள் சிறப்பாக நடைபெறுவதாக தெரிவித்தார்.**

சென்னை சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ், தியாகராய நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகத்தின் செயலர் திரு.துர்கா சங்கர் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (12.10.2018) பார்வையிட்டார்.

சென்னை சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ், ரூ.36.54 கோடி மதிப்பீட்டில் தியாகராய நகரில் தணிகாசலம் சாலையில் பல அடுக்கு வாகன நிறுத்தம் மற்றும் ரூ.33.80 கோடி மதிப்பீட்டில் தியாகராய சாலையில் பாதசாரிகள் நடைபாதை வளாகம் அமைக்கும் பணி மற்றும் நடேசன் பூங்கா மறு சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

சென்னை சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ், நடைபெற்று வரும் மேற்கண்ட பணிகளை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகத்தின் செயலர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு பணிகளின் தன்மை மற்றும் சிறப்பு அம்சங்கள் குறித்து, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் சென்னை சீர்மிகு நகர திட்ட நிர்வாக அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, தியாகராய நகர் தணிகாசலம் சாலையில் உள்ள பல அடுக்கு வாகன நிறுத்த பணியில் தற்போது நடைபெறும் அடித்தள பணிகளையும், தியாகராயா சாலையில் நடைபெறும் பாதசாரிகள் வளாகத்தின் பணிகளையும், நடேசன் பூங்காவில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றம் சூரிய ஒளியின் மூலம் கைபேசியை சார்ஜ் செய்யும் வசதியையும் பார்வையிட்டு இப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்று தெரிவித்தார்.

இவ்வாய்வின் போது, பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள், சென்னை சீர்மிகு நகர திட்ட அலுவலர்கள் மற்றும் செயற்பொறியாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**